ந.க.எண். 547 /2015/எம்.சி.1

கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம்
நாள். 17 .05.2017.

அறிவிப்பு

கோயம்புத்தூர் மாநகராட்சியில் காலியாக உள்ள உதவிப் பொறியாளர் பணியிடங்களை தகுதி வாய்ந்த நபர்களைக் கொண்டு பூர்த்தி செய்ய கீழ்க்கண்டவாறு விண்ணப்பங்கள் பெறப்படும்.

இடம் : மாநகராட்சி பிரதான அலுவலகம், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, கோயம்புத்தூர் – 641 001.

| பணியிடம் | கல்வித்தகுதி | விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் மற்றும் நேரம் | | மொத்த பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| | | நாள் | நேரம் | |
| உதவிப் பொறியாளர் ரூ.9300–34800+5100 தர ஊதியம் | Must possess a Degree in (Civil) Engineering or Town Planning from a recognized University. | 02.06.2017 | காலை 10.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணி வரை | 9 |

இன சுழற்சி வாரியான காலிப்பணியிட விபரங்கள் பின்வருமாறு.

| வ. எண். | இனம் | காலிப்பணி இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொதுப் போட்டி (முன்னுரிமை பெற்றவர்) | 1 |
| 2. | ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர்) (பெண்கள்) (முன்னுரிமை பெற்றவர்) | 1 |
| 3. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் முன்னுரிமை பெற்றவர் | 1 |
| 4. | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) முன்னுரிமை பெற்றவர் | 1 |
| 5. | பொதுப்போட்டி(பெண்கள்) (முன்னுரிமையற்றவர்) | 1 |
| 6. | ஆதிதிராவிடர் (முன்னுரிமை பெற்றவர்) | 1 |
| 7. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (பெண்கள்) (முன்னுரிமையற்றவர்) | 1 |

| | | |
|---|---|---|
| 8. | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (பெண்கள்) (முன்னுரிமையற்றவர்) | 1 |
| 9. | பொதுப் போட்டி (முன்னுரிமையற்றவர்) | 1 |
| | மொத்தம் | 9 |

கீழ்க்கண்ட தகுதியுடையவர்கள் கீழ்க்காணும் அசல் ஆவணங்களுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடம், நாள் மற்றும் நேரத்தில் நேரில் வந்து விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பங்கள் பெறப்பட்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நேர்முகத் தேர்வு நடத்தப்படும். மேலும் உரிய நேரத்தில் அலுவலகத்திற்கு வந்து பிரதான அலுவலகம் பொது பிரிவில் தங்களது வருகை குறித்த விபரத்தினை பதிவு செய்ய வேண்டும். உரிய நேரத்தில் ஆஜராக தவறியவர்களை எக்காரணம் கொண்டும் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.

- கோயம்புத்தூர் மாவட்ட எல்லைக்குள் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். குடும்ப அட்டை மற்றும் இருப்பிடச் சான்றிதழ் அவசியம் கொண்டு வர வேண்டும்.
- <u>வயது வரம்பு</u>

  தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / அருந்ததியர் / பழங்குடியினர் – 18 வயது முதல் 35 வயது வரை
  மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / பிற்படுத்தப்பட்டோர் – 18 வயது முதல் 32 வயது வரை
  இதர வகுப்பினர் – 18 வயது முதல் 30 வயது வரை
- பள்ளி / கல்லூரி மாறுதல் சான்றிதழ் (Transfer Certificate)
- மதிப்பெண் பட்டியல் ($10^{th}$ (SSLC) / $12^{th}$ (HSC))
- கல்வித் தகுதி சான்றிதழ்கள்
- இனச் சான்றிதழ் (Community Certificate)
- வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அட்டை (இருப்பின்)
- அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் இருந்து 01.05.2017க்கு பிறகு பெறப்பட்ட புகைப்படத்துடன் கூடிய நன்னடத்தை சான்றிதழ்.
- முன்னுரிமை (Priority) அடிப்படையில் பணிநியமனம் கோருவதாயிருந்தால், உரிய அதிகாரியின் ஒப்புதலுடன் கூடிய சான்றிதழ்களை அதற்கான உரிய படிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலும் மேற்க்கண்ட விபரங்கள் மாநகராட்சி இணையதளத்திலும் (www.ccmc.gov.in), மாநகராட்சி அனைத்து மண்டல அலுவலக அறிவிப்புப் பலகையிலும் வெளியிடப்பட்டுள்ளது.

17/5/17

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

16/5/17